**.மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**அசல் வழக்கு எண். 368/2018**

PW1 – செல்வம் த/பெ. பரதேசி
நாள்– 13.03.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை :**

தாவா சொத்து எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் 120 குழி ஆகும். ஏர்ஸில் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் 325 B ஆகும். சாட்சி பின்னிட்டு புல எண் தெரியாது என கூறுகிறார். தாவா புல எண்ணின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 4 ½ மா ஆகும். தாவா சொத்து பீமன் ராவ் என்பவருக்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். பீமன் ராவ் இறந்த பிறகு அவரது வாரிசான ராகவேந்திர ராவ் மற்றும் நரசிங்க ராவ் ஆகியோர்கள் உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வந்தது என்றால் சரிதான்.

ராகவேந்திர ராவ் வாரிசு இன்றி இறந்துவிட்டார் என்றால் சரிதான். நரசிங்கராவ் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நரசிங்கராவிற்கு கங்காபாய் என்ற மனைவியும், மகன்களும், மகள்களும் வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நரசிங்க ராவ் இறந்த பிறகு அவரது வாரிசுதாரர்கள் தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நரசிங்கராவின் வாரிசுகளிடம் 2000 வருடம் முதல் பிரதிவாதிகள் அனுமதியின் பேரில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து யார் சுவாதீனத்தில் உள்ளது என்றால் எனது சுவாதீனத்தில் தான் உள்ளது. ராகவேந்திர ராவ் குடும்பத்திடம் எந்த தேதியில் எனது தகப்பனார் குத்தகை பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் எனது தாத்தா காலத்தில் இருந்து

நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

எனது தகப்பனார் பெயரில் தாவா சொத்தைப் பொறுத்து குத்தகை பதிவு ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. குத்தகையானது வாய்மொழி குத்தகையாகும். தாவா சொத்தை பொறுத்து எந்த தேதியில் வாய்மொழி குத்தகை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் யாரிடம் குத்தகையை செலுத்தி வந்தேன் என்றால் ராகவேந்திரராவிடம் குத்தகை செலுத்தி வந்தேன். ராகவேந்தி ராவ் எங்கு வசித்து வந்தார் என்றால் திருச்சி ஸ்ரீரங்கத்தில் வசித்து வந்தார். குத்தகையை நான் போய் செலுத்தி வந்தேனா என்றால் இல்லை. அவரே வந்து குத்தகையை பெற்று செல்வார்.

எப்பொழுது குத்தகை செலுத்துவீர்கள் என்றால் வருடத்திற்கு ஒரு முறை ஆகும். குத்தகை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் குத்தகை சாகுபடி செய்து வருவதற்கான வருவாய் துறை ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கடந்த 20 ஆண்டுகளாக ராகவேந்திர ராவ் குத்தகை பெற்று செல்வதில்லை. அவரது இருப்பிடம் தெரியாது.

தாவா சொத்தில் நானோ, எனது தகப்பனாரோ, எனது தாத்தாவோ குத்தகைதாரர் கிடையாது எனவும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் சாகுபடி செய்து வருவதாகவும், ஆள்துளை கிணறுகள் அமைத்துள்ளதாகவும், வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 தாவா சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு பிரதிவாதிகள் கிஸ்து செலுத்தியும், நிவாரணம் பெற்றும், வங்கியில் கடன் பெற்றும் அனுபவித்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டு தாவா சொத்தை பிரதிவாதிகள், தாவா சொத்தின் உரிமையாளரிடம் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

அசல் வழக்கு எண் 176/2019–ல் பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 176/2019 பற்றி பிரதிவாதிகளுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்பதால் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.